1968 ஆகஸ்ட் 21]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்த ஒரு கேள்விக்கு மட்டிலும் 6 துணைக் கேள்விகள் கேட்டிருக்கிறார்கள்.

திரு. கே. விநாயகம் : இதுதான் ரொம்ப இம்பார்டென்ட் க்வச்டியன்.

You can shut out a member like this since you are in a convenient position. But I say, Sir, you must have more humanitarian consideration, be more large-hearted and more liberal.

திருப்பூர் சப்-ஜெயில்

* 76 வினா.—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு சட்ட கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் சப்-ஜெயிலை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. சு. துரைசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருப்பூர் நகரத்திலே இருக்கிற அந்த சிறைச்சாலையானது போதுமான வசதி குறைவாக இருப்பதோடு, அங்கே சில நேரத்திலே அரசியல் காரணமாக சிறை செல்லுகின்றவர்கள் உணவு உண்பதற்கோ வேறு காரியங்களுக்கோ எந்தவிதமான வசதியும் இல்லை. அந்த அளவு மிகவும் மோசமான நிலைமையில் இருக்கிறது. ஆகவே, அதை விரிவுபடுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(திரு. கே. விநாயகம் அவர்கள் முதல் அமைச்சர் அவர்களுடன் பேசிக் கொண்டிருந்தார்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சபையினுடைய நிகழ்ச்சி கெடாத வகையில் உறுப்பினர்கள் ஒருவருக்கு ஒருவர் பேசலாம்.

திரு. சு. துரைசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருப்பூர் நகரத்திலே இருக்கிற சிறைச்சாலையானது போதுமான வசதி இல்லாமல் இருக்கின்றது. அங்கே பல நேரங்களில் அரசியல் காரணங்களுக்காக 100, 200 பேர்கள் வருகிற நேரத்தில் உணவு உண்பதற்கும் மற்ற காரியங்களுக்கும் வசதி இல்லாமல் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகவே, அந்த சிறைச்சாலையை விரிவுபடுத்த அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்பொழுது 44 கைதிகள் அங்கே இருப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு, அதற்குள்ள வசதிகள் எல்லாம் செய்யப்பட்டிருக்கின்றன. கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்வது எதிர்பாராத சில சமயங்களில் ஏற்படுகிற

நிகழ்ச்சியைப் பற்றி. அப்பொழுதைக்கப்பொழுது அது பரிசீலிக்கப்பட்டு, அந்த சிறைச்சாலையில் இடம் இல்லையென்றால் மத்திய சிறைச்சாலைக்கு அனுப்பப்படுகிறார்கள்.

திரு. செ. பாலசுப்பிரமணியன் : திருப்பூர் டிவிஷனில் மாஜிஸ்டிரேட் கோர்ட் இருந்தது. அப்பொழுது சிறைச் சாலைகள் கட்டப்பட்டிருக்கின்றன. சப்-மாஜிஸ்டிரேட் கோர்ட் என்ற அளவில்தான் அவற்றை கட்டி வந்திருக்கிறார்கள். ஆகையால், அந்த டிவிஷனில் அந்த சிறைச்சாலைகளையாவது கொஞ்சம் விரிவு படுத்துவதற்கு இந்த அரசாங்கம் ஏதாவது யோசனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இவையெல்லாம் சப்-ஜெயில்ஸ்—துணை சிறைச்சாலைகள்தான். மத்திய சிறைச்சாலைகள் வேறு இருக்கின்றன. சிறைச்சாலைகளை அதிகப்படுத்துவது என்பது இந்த அரசாங்கத்தினுடைய விருப்பம் அல்ல.

திரு. எம். பூபதி : தலைவர் அவர்களே, சிறைச்சாலைகளிலே வேலை செய்கின்ற கைதிகளுக்கு மேற்கொண்டு ஏதாவது சௌகரியம் செய்ய சர்க்கார் உத்தேசித்து இருக்கிறதா ? அதே நேரத்தில் அவர்கள் பல்வேறு தொழில்களிலே ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஏதாவது உதவி நிதி கொடுக்க சர்க்கார் உத்தேசித்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தனிக் கேள்வி போடவும்.

திரு. கே. என். குமாரசாமி : சார், திருப்பூர் சிறைச்சாலையிலே கைதிகளுக்குச் சாப்பாடு போடுகிற இடம் பப்ளிக் ரோடு மாதிரி இருக்கிறது. ஒரு 'பவுண்ட்'டாவது கட்டி, அவர்களுக்கு மறைவான இடத்தில் சாப்பாடு போடுவதற்கு யோசனை செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கனம் அங்கத்தினருடைய யோசனை இலாகாவுக்கு அனுப்பப்படும்.

திரு. எ. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, புதுக்கோட்டை சிறையிலே இருக்கும் கைதிகள் தனியார் வேலைகளுக்கும் பயன்படுத்தப்படுவதாக—புதுக்கோட்டை அரண்மனை வேலைகளுக்கும் பயன்படுத்தப்படுவதாக—என்னிடம் ஆதார பூர்வமான தகவல் இருப்பதால் இப்படிப்பட்ட புகார் அரசுக்கு வந்திருக்கிறதா ? வந்திருந்தால் அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் .: நானே அந்த புதுக்கோட்டை-சிறைச்சாலையிலே இருந்தேன். அந்த மாதிரி ஒன்றும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. கனம் அங்கத்தினர் அவர்கள் அவரிடம் இருக்கும் ஆதார பூர்வமான தகவலை அரசுக்கு அனுப்பினால் அதைப்பற்றி உடனடியாக விசாரணை நடத்தி, நடவடிக்கை எடுக்கப்படும்.